உத்தரவுப்படி தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்குக் கொடுக்க வேண்டிய, சேர வேண்டிய விகிதாச்சாரம் சேரவில்லை என்பது உண்மையா? அந்தத் துறையில் அந்த விகிதாச்சாரப்படி சேர்வதற்கு என்ன வழியை இந்த அரசு கடைப்பிடிக்கும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் சேராமல் இருக்கவில்லை. ஒரு நியதியைச் சொன்னேன். அரசாங்கத்தின் வழிமுறையைச் சொன்னேன்.

பொய்மான் குன்றை சுற்றுலா இடமாக அறிவிக்கும் திட்டம்.

*வினா எண். 972—செல்வி வி. விசயலட்சுமி :—மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், பொய்மான் கரடு என்ற சரித்திர பிரசித்தி பெற்ற குன்றை சுற்றுலா இடமாக அறிவிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அறிவிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :—(அ) இல்லை. அரசு எந்த இடத்தையும் சுற்றுலா இடமாக அறிவிக்கும் வழக்கம் இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

செல்வி வி. விசயலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொய்மான் கரடு என்ற இடத்தை ராமாயண காலத்தோடு ஒட்டிப்பேசுகிறார்களே, அதற்கு ஏதாவது சான்றுகள் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, யாராவது ஆராய்ச்சியாளர்களிடத்தில் கேட்க வேண்டிய கேள்வியை அமைச்சரிடத்தில் கேட்பது நல்லதல்ல.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொய்மான்கரடு என்ற இடத்தில் தெரிகிற ஒரு மாயமான் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து பார்த்தால் தான் தெரிகிறது. அந்த இடம் தனியாருக்குச் சொந்தமான இடம் என்று சொல்லப்படுகிறது. அந்த நிலத்தில் பயிர் செய்கிற நேரத்தில் பார்வையாளர்களை பார்க்க விடாமல் அந்த நிலச்

*1981 மே 5]*

சொந்தக்காரர்கள் வேலிபோட்டு வைத்துவிடுவதாகச் சொல்கிறார்கள். பார்வையாளர்கள் அதை எந்தக்காலத்திலும் பார்ப்பதற்கு வசதி செய்கிற வகையில், அந்த இடத்தை அரசே கையகப்படுத்தி, அந்த இடத்தினை ஒரு பார்வையாளர் இடமாக உருவாக்க அல்லது ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்திலே நெடுஞ்சாலைத் துறையினர் ஒரு தகவல் குறிக்கும் அடையாளப் பலகை ஒன்றை நிறுவி இருக்கிறார்கள் என்ற தகவல் இருக்கிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற தகவல்படி அந்த இடம் தனியாருக்குச் சொந்தமான இடமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அது பற்றிய தகவல் இப்போது இல்லை. அதைப்பற்றிய தகவலைச் சேகரித்து, அதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டிய துறையிடத்தில் சுற்றுலாத் துறை தெரிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-20]

திரு. ஆர். வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அரசு சுற்றுலா இடமாக அறிவிப்பதில்லை என்று சொன்னார்கள். சுற்றுலா இடமாக அறிவிப்பதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நான் சுற்றுலா ஸ்தலமாக அரசு அறிவிக்கும் திட்டம் இல்லை என்று பதில் அளித்ததிலேயே அது அடங்கிவிட்டது. மீண்டும் அறிவிப்பதற்கு என்னென்ன தகுதிவேண்டுமென்று கேட்கிறார்கள். அறிவிப்பதற்கே திட்டம் இல்லை என்று சொல்லும்போது என்ன தகுதி வேண்டுமென்று கேட்பது சரியல்ல. என்றாலும் விளங்குவதற்காகச் சொல்கிறேன், அது இயற்கையிலேயே மக்களால் வரவேற்கப்பட்டு, மக்களைக் கவர்ந்த அந்த இடத்திற்கு மக்கள் செல்லுகின்ற தன்மை, சூழ்நிலைகளை எல்லாம் பெற்றிருந்தால் ஏற்கெனவே சுற்றுலா ஸ்தலமாக மாறிவிடும்.

நத்தம் கோவில்பட்டியிலுள்ள அருள்மிகு கைலாசநாதர் ஆலயம்.

*வினா எண். 973—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம், நத்தம் கோவில்பட்டியில் ஒரு புராதன கைலாசநாதர் கோவில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?